Tamilmanam – International Research Journal of Tamil Studies
An international, peer-reviewed academic journal
e-ISSN: 3049-0723
pISSN:3107-7781

தமிழ்மணம்
Peer-reviewed · Open access · Google Scholar · Crossref DOI · SJIF
Imapact Factor 3.5 · Monthly
DOI: 10.63300/tmi12n062026.05
Vol. 12, No. 06 (2026) 12 06 2026 36–46 TIRJTS-2026-0011

UGC Approved by Transparent Peer Review

RESEARCH ARTICLE

திருவாலவாய்த் திருத்தலமும் விருத்த இலக்கியங்களும்

The Sacred Shrine of Thiruvalavai and Virutham Literature

Dr. N. Aravindkumar[1,*]

[1] Assistant Professor, Department of Tamil, KPR College of Arts Science and Research, Arasur, Coimbatore.
***Corresponding author:** Dr. N. Aravindkumar, aravindanbu4321@gmail.com

ARTICLE INFO

Article history
Received: 10 October 2026
Revised: 12 October 2026
Accepted: 15 October 2026

Article ID
TIRJTS-2026-0011

Peer review
Double-blind peer review

Keywords
Thiruvalavai
Virutham
Meenakshiammai
literary form
Adi Madakku
Aasiriya Virutham
Tamil poetry
Madurai literature

ABSTRACT

Thirualavay is the ancient name of Madurai, a renowned city that has made significant contributions to the growth and development of Tamil literature. Lord Somasundarar and Goddess Meenakshi, the presiding deities of Madurai, are believed to remove the three impurities of living beings and bestow the ultimate liberation of Mukti. Inspired by the divine grace of these deities, Tamil scholars have composed numerous literary works that uphold the principles and doctrines of Saivism. Among these works are Virutham compositions, which belong to the Prabandham literary tradition and are characterised by four metrical lines of equal measure. Adhering to established grammatical structures and literary conventions, these compositions predominantly express the devotees' prayers for divine grace, relief from poverty, and the attainment of a prosperous and spiritually elevated life. These works also elucidate the supreme power of the divine, divine plays (Thiruvilaiyadal), divine attributes, religious truths, Saiva Siddhanta principles, and the ethical values essential for righteous living. In composing Virutham literature, poets have also incorporated innovative literary forms, such as Adimada kku, alongside descriptions of divine greatness. This study aims to establish that these literary works not only celebrate divine grace and the spiritual fulfilment attained by devotees but also contribute to the emergence and development of new literary forms within Tamil literature.

How to cite this article: Dr. N. Aravindkumar (2026). திருவாலவாய்த் திருத்தலமும் விருத்த இலக்கியங்களும். *Tamilmanam – International Research Journal of Tamil Studies*, *12*(06), 36–46.
https://doi.org/10.63300/tmi12n062026.05
Copyright and licence: © 2026 The Author(s). This is an open access article distributed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (CC BY 4.0), which permits unrestricted use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited.

முனைவர் ந.அரவிந்த்குமார்,

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,

கேபிஆர் கலை அறிவியல் மற்றும் ஆராய்ச்சிக் கல்லூரி,

அரசூர், கோயம்புத்தூர்.

ஆய்வுச்சுருக்கம்

திருவாலவாய் என்பது மதுரைக்குரிய தொன்மப்பெயராகும். தமிழ் வளர்த்த பெருநகரமாகிய மதுரையில் உலகத்துயிர்களின் மும்மலங்களை நீக்கி மேலான முக்தி அருளும் பெருந்தெய்வங்களாகச் சோமசுந்தரரும் மீனாட்சியம்மையும் வீற்றிருக்கின்றனர். அத்தெய்வங்களின் கருணைத்திறத்தை வியந்து சைவ சமயநெறிக்கான கொள்கைகளைப் பேணித் தமிழ்ச்சான்றோர் செறிவுடைய பல இலக்கியங்களைப் பாடியுள்ளனர். அதில் பிரபந்த வகையைச் சார்ந்த விருத்த நூல்களும் அடங்கும். விருத்தம் என்பது அளவொத்த நான்கடியால் பாடுவதாகும். இலக்கணக் கட்டமைப்புடன் மரபுநிலைத் திரியாது திருவாலவாய்த் திருத்தலத்தின் மீது பாடப்பட்ட விருத்த நூல்கள் பெரும்பாலும், சோமசுந்தரரும் மீனாட்சியம்மையும் தம்மைத் தஞ்சமென்று வாழும் அடியவருக்குக் கருணை கொண்டு அருளவேண்டும், தம் வறுமை நிலையினைப் போக்கிச் மேலான வாழ்வினைப் பெற துணைசெய்யவேண்டும் எனக்கேட்பதாகப் பாடப்பட்டுள்ளன. அந்நூல்களில் பரம்பொருளின் பராக்கிரமம், திருவிளையாடல்கள், தோற்றச்சிறப்பு, சமய மெய்ம்மைகள், சித்தாந்த உண்மைகள், அறவாழ்விற்கான வழிவகைகள் முதலியவை கூறப்பட்டுள்ளன. விருத்த இலக்கியத்தைப் பாடும் போது அதில் புலவர்கள் இறைவனின் சிறப்போடு சேர்த்து அடிமடக்கு முதலிய புதிய இலக்கிய வடிவங்களையும் புகுத்திப் பாடியுள்ளனர். இறைவனின் திருவருளையும் அதன்வழி உயிர்கள் பெறுகின்ற மேலான வாழ்வையும் புலவர்கள் பாடியதோடு, புதிய இலக்கிய வடிவங்களின் தோற்றத்திற்கும் துணைசெய்துள்ளனர் என்பதை நிறுவுவதே இவ்வாய்வாகும்.

திறவுச்சொற்கள்

திருவாலவாய் – விருத்தம் – மீனாட்சியம்மை – இலக்கிய வடிவம் – அடிமடக்கு – ஆசிரிய விருத்தம்

முன்னுரை

செவ்வியல் இலக்கிய காலந்தொடங்கித் தற்காலம் வரையிலும் எழுந்த பலவகை இலக்கியங்களில் புகழப்பெறும் மாண்பினைக் கொண்டதாகத் திருவாலவாய்த் திருத்தலம் விளங்குகிறது. திருவாலவாய் எனும் சொல் பழந்தமிழ் நகரமாகிய

மதுரைக்குரிய பெயராகும். மதுரைத்தலத்தில் வீற்றிருந்து உயிர்களின் மலமாயை நீக்கி அருளும் சோமசுந்தரர் மீனாட்சியம்மைமீது பல்வேறு காலகட்டங்களில் வாழ்ந்த புலவர்கள் பக்திநெறி பூண்டு இலக்கணச் செறிவுடைய பல இலக்கியங்களைப் பாடியுள்ளனர். அதில் பிரபந்த வகையைச் சார்ந்த இலக்கியங்களே அதிகம் எனலாம். பிரபந்தங்கள் அளவில் சிறியதாக இருப்பதும், புலவர்கள் தாம் கூறக்கருதிய பாடுபொருளைத் திறம்படக் கூறுவதற்கேற்ற நிலையில் விளங்குவதும் அப்பிரபந்த நூல்கள் மிகையாகத் தோன்றக் காரணமாக அமைந்தன. பிரபந்த வகையுள் விருத்தம் என்பது அளவொத்த நான்கடியால் பல சீர்கள் கொண்டு பாடப்பெறுவதாகும். புலவர்களின் உணர்ச்சிகளுக்கேற்ற வடிவத்தைத் தரவல்ல விருத்த இலக்கியம் ஓசைநயத்திற்குரிய பல சந்தங்கள் பிறக்கத் துணைநின்றன. பாடுபொருளினைச் செறிவுடையதாக அமைத்துப்பாட விருத்தமானது ஏற்றநிலையில் இருந்தமையால் பல புலவர்கள் திருவாலவாய்த் திருத்தலத்தின் மீது விருத்த நூல்கள் பலவற்றைப் பாடினார். திருவாலவாய்த் திருத்தலத்தின் மீது பாடப்பட்ட விருத்த இலக்கியங்களையும் அதன் சிறப்பியல்புகளையும் ஆராய்ந்துரைப்பதாக இக்கட்டுரை அமைகிறது.

விருத்த இலக்கியம்

தமிழில் தோன்றி வளர்ந்த செல்வாக்குமிக்க யாப்பு வடிவம் விருத்தமாகும். பாவினங்கள் மூன்றினுள் ஒன்றாக அமைகின்ற விருத்தம் அளவொத்த நான்கடியால் பல சீர்கள் கொண்டு பாடப்பெறுவதாகும். முதலடியில் எத்தனை சீர்கள் வந்தனவோ, அதே சீர்கள் அடுத்த மூன்றடியிலும் வர வேண்டும் என்பது விருத்தத்தின் வரையறையாகும். புலவர்களின் உணர்ச்சிக்கேற்பப் பல வகையான சொற்களில் அமைந்து, வெவ்வேறு சந்தங்கள் பிறக்க வழி செய்கின்ற விருத்த இலக்கியமே உணர்ச்சிகளுக்கு ஏற்ற வடிவத்தைத் தர உகந்தது என்பதை உணர்ந்த சான்றோர் பிற்காலத்தில் தமிழிலக்கியங்களைப் படைப்பதற்கு விருத்தத்தையே பெரும்பாலும் பயன்படுத்தினர். திருத்தக்கதேவர் பாடிய சீவகசிந்தாமணி தமிழில் தோன்றிய முதல் விருத்தக் காப்பியமாகும். இதேபோன்று கம்பராமாயணம், பெரியபுராணம், திருவிளையாடற் புராணம், கந்தபுராணம் போன்ற நூல்களிலும் பெரும்பான்மையான பாடல்கள் விருத்தயாப்பிலேயே பாடப்பட்டுள்ளன.

விருத்த யாப்பினைத் தனித்த இலக்கிய வகையாக மாற்றிய பெருமை சமயச் சான்றோர்களுக்கு உரியதாகும். நாலாயிர திவ்யப் பிரபந்தத்தில் நம்மாழ்வாரின் திருவிருத்தம், திருமுறைகளுள் நம்பியாண்டார் நம்பி பாடிய கோயில் திருப்பண்ணியர் விருத்தம், ஆளுடையபிள்ளையார் திருச்சண்பை விருத்தம் முதலிய நூல்கள் விருத்தத்தைத் தனித்த இலக்கிய வகையாகக் கொண்டு பாடப்பெற்ற நூல்களாகும்.

இந்நூல்களை அடிப்படையாகக் கொண்டே சிற்றிலக்கியக் காலத்தில் விருத்தம் தனித்த இலக்கிய வடிவமாக உருவெடுத்தது. விருத்தம் எனும் சொல்லுக்கு மண்டிலம், ஒழுங்கு என்ற வேறுபெயர்களும் உண்டு. மண்டிலம் என்ற சொல்லானது வட்டம் எனும் பொருளைத் தருகிறது. வட்டமானது தொடங்கிய இடத்திலேயே வந்து முடிவுறுவதைப் போன்று விருத்தமும் நான்கடிகளால் அமைந்து ஒழுங்கான சீர் வடிவத்தைப் பெற்று முடிவடைகிறது.

விருத்த இலக்கணம்

பாவினமாகிய விருத்தம் தனித்த இலக்கிய வடிவம் பெற்றதை வீரப்பமுதலியார், **"இசைக்குப் பொருந்துமாறு இயற்றமிழ் பாக்களில் விகற்பங்கள் உண்டாக்கிப் பாடியதே நமது தற்கால விருத்தங்களின் வேர்களாம்" (விரு.பா.பக் - 20)** என விருத்தப்பாவியல் எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார். அளவொத்த நான்கடியினை எல்லையாகக் கொண்ட விருத்தத்தின் இலக்கணத்தை முத்துவீர உபாத்தியாயர் உரைக்கையில், வில், வாள், வேல், செங்கோல், யானை, குதிரை, நாடு, ஊர், குடை இவ்வொன்பதையும் பத்துப் பத்து அகவல் விருத்தத்தால் ஒன்பது வகையுறப் பாடுவது விருத்தவிலக்கணம் என்றுரைக்கிறார். இதனை,

"வில்வாளொடுவேல் செங்கோல்யானை

குதிரைநாடூர் குடையிவ்வொன்பதும்

பப்பத்தகவல் விருத்தத்தாலே

யொன்பது வகையுறவுரைப்பதுவிருத்த

விலக்கணமென் மனாரியல்புணர்ந்தோரே"

(முத்.சூ-165)

என்ற சூத்திரத்தினால் அறியமுடிகிறது. முத்துவீரியம் உரைக்கிற இவ்விருத்தத்திற்குரிய இலக்கணத்தைப் பன்னிரு பாட்டியலும் (பன்.பாட்.சூ-290) எடுத்துரைக்கிறது.

மதுரைத் திருவிளையாடல் போற்றித் திருவிருத்தம்

இந்நூல் மதுரைமாநகரில் சோமசுந்தரக்கடவுள் நிகழ்த்திய அறுபத்து நான்கு திருவிளையாடலையும் தொகுத்துச் சொல்கின்ற தொகை நூல் போல அமைந்துள்ளது. இதில் இடம்பெறுகின்ற திருவிளையாடல் நிகழ்வுகள் அனைத்தும் பரஞ்சோதியாரின் திருவிளையாடற்புராணத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளன. சோமசுந்தரரின் மேல் பாடப்பட்ட இத்திருவிருத்தம் வித்துவான்.சு.நல்லசிவன்பிள்ளை அவர்களால் இயற்றப் பட்டதாகும். இந்நூலின் முதற்பதிப்பு 1940 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இந்நூலின்

மறுபதிப்பினை மதுரமித்தரனின் ஆசிரியர் ந.சுப்பிரமணியன் 1966ஆம் ஆண்டு வெளியிட்டிருக்கிறார். இத்திருவிருத்தத்திற்கு மு.முத்துவேங்கடாசலமய்யர் பொழிப்புரை எழுதியுள்ளார். இந்நூலுக்குப் பொழிப்புரை எழுதியவர், பதிப்பித்து வெளியிட்டவர் ஆகிய இருவரும் இந்நூலாசிரியர் வித்துவான்.சு.நல்லசிவன்பிள்ளை அவர்களின் மாணாக்கர்களே என்பது குறிப்பிடத்தக்கதாகும். இவ்விருத்த நூலைப் பதிப்பித்து வெளியிட்ட ந.சுப்பிரமணியன் அவர்கள் தன்னுடைய தந்தையாரின் மணிவிழா நினைவாகத் தன் ஆசிரியரைக் கொண்டே இந்நூலை இயற்றச்செய்தார் என்பது நூன்முகப்புப்பகுதியில் அமைந்த பதினொரு விருத்தப்பாக்களில் மிக விரிவாக எடுத்துரைக்கப்படுகிறது. இத்திருவிருத்த நூல் அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தால் அமைந்த முப்பத்திரண்டு பாடல்களைக் கொண்டதாகும். சித்தி வேழத்தைப் போற்றுகின்ற காப்புப்பாடலோடு தொடங்குகின்ற இந்நூல், திருவாலவாய் இறைவன் உயிர்களிடத்தில் கருணைகொண்டு நிகழ்த்திய திருவிளையாடல்களை முறைப்படுத்திக் கூறுவதாக அமைந்துள்ளது. சோமசுந்தரரைப் போற்றுகின்ற இந்நூலில் அமைந்த விருத்தப்பாக்கள் அனைத்தும் சந்தச்சுவை மிகுந்ததாகவுள்ளன. இதனை,

“விண்பணி யுக்கி ரற்கு வேல்வளை செண்டு நல்கு

பண்புறு கருணை போற்றி பௌவநீர் சுவறு மாறு

மண்புகழ் கதிர்வேல் ஏவு மாறனுக் கிரன்சீர் போற்றி

திண்பரு வளைகொண் டிந்திரன் திருமுடி சிதைசீர் போற்றி”

(மது.போ.திரு.பா-7)

என்ற பாடலானது எடுத்தியம்புகிறது. வாழ்த்துப்பாடலோடு முற்றுப்பெறுகின்ற இத்திருவிருத்தம் திருவிளையாடற்புராணத்தின் சாரம்போலத் திகழ்கிறது.

திருவிளையாடல் கருணைத் திருவிருத்தம்

பிறவியாகிய பெருந்துன்பத்தைப் போக்குகின்ற சோமசுந்தரர் உயிர்களிடத்தில் கொண்ட கருணைத்திறத்தைப் பாடுவதாகத் திருவிளையாடல் கருணைத் திருவிருத்தம் எனும் நூல் அமைந்துள்ளது. இந்நூல் டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல் நிலையத்தாரால், 1957 ஆம் ஆண்டு திருப்பனந்தாள் ஸ்ரீகாசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகளின் நாண்மங்கலத்தன்று நன்றியறிவிப்பு மலராகப் பதிப்பித்து வெளியிடப்பட்டது. இந்நூலில் இடம்பெறுகின்ற திருவிளையாடல் நிகழ்வுகள் அனைத்தும் திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணத்தை அடிப்படையாகக் கொண்டே பாடப்பெற்றுள்ளன.

இறைவனின் பெருங்கருணையோடு அருளாடல் நிகழ்வினை முறைப்படுத்திப் பாடுகின்ற இந்நூல் சித்திவிநாயகர் மேல் பாடப்பட்ட காப்புப்பாடலுடன் தொடங்குகிறது. இந்நூல் அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தத்தால் அமைந்த பன்னிரு விருத்தப் பாக்களைக் கொண்டுள்ளது. இதில் அமைந்த முதல் பதினோரு பாடல்கள் இறைவன் நிகழ்த்திய திருவிளையாடல்களின் சிறப்பைப் பெயரளவில் எடுத்துரைக்கின்றன. நூலிலமைந்த இறுதிப்பாடல் திருவாலவாய்த்திருத்தலத்தில் மீனாட்சிதேவியோடு வீற்றிருக்கின்ற சோமசுந்தரக்கடவுள் தம்மைத் தஞ்சமென்று வாழும் அடியவருக்குக் கருணை கொண்டு அருளவேண்டும் என விண்ணப்பிப்பதாக அமைந்துள்ளது (திரு.கரு.பா-12). உலகம் முழுதும் செங்கோன்மை நிலைபெற்று, வறுமை நீங்கி மழைவளம் பெருகி உயிர்கள் இன்புற்று வாழ வேண்டும் எனும் வாழ்த்தோடு நிறைவுறுகின்ற இந்நூல் கற்போருக்கு எளிதில் விளங்கும் வகையில் இறைவனின் கருணைத்திறத்தை எடுத்துரைக்கிறது.

மதுரை மீனாட்சியம்மன் அறுசீரடியாசிரியவிருத்தம்

மதுரை மீனாட்சியம்மனைப் பாட்டுடைத் தலைவியாகக் கொண்டு பாடப்பட்ட இந்நூல் திருப்போரூர் டி.கோபால் நாயகர் அவர்களால் இயற்றப்பட்டதாகும். இந்நூல் அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தத்தால் அமைந்த பத்து விருத்தப்பாக்களைக் கொண்டுள்ளது. இந்நூலார் தாம் வறுமையினால் வாடித் துயருற்ற நிலையினை மீனாட்சியம்மையிடம் எடுத்துரைத்து, தம்முடைய வறுமை நிலையினைப் போக்கிச் செல்வச்செழிப்புடன் கூடிய மேலான வாழ்வினை அருளுமாறு வேண்டி, இவ்விருத்தச் செய்யுள்களை யாத்துள்ளார் (மது.மீ.அறு.விரு.பா-5). இவ்விருத்த இலக்கியத்தின் ஒவ்வொரு பாடலிலும் இறைவனின் திருவருளாகிய மீனாட்சியம்மை, அவ்விறைவனின் இடபாகம் ஏற்றருளும் கருத்தானது இடம்பெறுள்ளது. மீனாட்சியம்மையின் அருட்திறத்தைப் பாடுகின்ற இவ்விலக்கியம் உரையின்றிக் காணப்படுகிறது.

மதுரை மீனாட்சியம்மன் அடிமடக்கு ஆசிரிய விருத்தம்

அடிமடக்கு என்பது பொருள் வேறுபட்டோ, வேறுபடாமலோ செய்யுளின் அடியோ, சீரோ மீண்டும் மீண்டும் வருதலாகும். மீனாட்சியம்மைமீது பாடப்பட்ட இவ்விருத்த இலக்கியத்தில் அமைந்த செய்யுள்களில் சீர்கள் மீண்டும் மீண்டும் வந்து வேறு பொருளைத் தந்துள்ளன. இந்நூல் அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தத்தால் அமைந்த பத்து விருத்தப்பாக்களைக் கொண்டமைகிறது. இதனைத் திருப்போரூர் டி.கோபால் நாயகர் அவர்கள் இயற்றியுள்ளார்.

உலகத்துயிர்களுக்குத் தாயாய் விளங்குகின்ற மீனாட்சியம்மை மறைகளில் பொதிந்த பொருளாக விளங்குபவள். வில்போலும் வளைந்த புருவத்தினையும் மரகதம் போன்ற

மேனியையும் கொண்டவள். கிளியினைத் தாங்கும் கரத்தினில் அங்குசம் பாசம் இரண்டையும் தாங்குபவள், அடியவர்க்கு எளியவளாகிய மீனாட்சியம்மை தேவர்கள் போற்றும் சிறப்பினைக் கொண்டவள். உயிர்களுக்குத் திருவருள் புரிந்து இம்மை மறுமை பேற்றினை அருளுபவள், மலையத்துவசனுக்கு மகளாகப் பிறந்து, மதுரையை அரசாண்டு சோமசுந்தரக்கடவுளைத் திக்குவிசயம் செய்து மணம் புரிந்தவள் என்பனபோன்ற கருத்துகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. இத்தகைய, மீனாட்சியம்மையின் அடித்தொழுது சரண் புகுந்தேன் என இந்நூலார் பாடியுள்ளார். இதனை,

“கெலியாளை யெண்டிசையுங் கெலித்தாளை யயன்

றலைகைக் கேந்தியேற்ற, பலியாளை யடியவர்க்கே பலித்

தாளை மதுரைவரப் பணித்தவேழார், கலியாளை யெவ்வு

யிருங் கலித்தாளை யடியேனைக் காக்கச்சற்றுஞ், சலியா

ளைக் கணவனுக்கஞ் சலித்தாளைத் தஞ்சமெனச் சரண் புக்கேனே”

(மது.மீ.அடி.பா-10)

எனும் பாடலால் உணரமுடிகிறது. மதுரை மீனாட்சியம்மையின் தோற்றச்சிறப்பு, திருவிளையாடல் நிகழ்வுகள், திருவருட்கருணை ஆகியவற்றை எடுத்துரைக்கின்ற இந்நூல் பெருவழக்கில் அறியப்படாத நூலாக இருக்கிறது. யாப்புக் கட்டமைப்போடு செறிந்த கருத்துக்களைக் கொண்ட இந்நூல் உரையின்றி அமைந்துள்ளது.

மதுரை சோமசுந்தரக்கடவுள் அடிமடக்காசிரியவிருத்தம்

ஆன்மாக்களை மலங்களிலிருந்து நீக்கி மேலான வீடருளும் சோமசுந்தரமூர்த்தி மீது பாடப்பட்ட இவ்விருத்த இலக்கியம் சிவபரம்பொருளின் தோற்றப்பொலிவு, சிவ பராக்கிரமம், சிவத்தொன்மம் ஆகியவற்றை எடுத்துரைக்கிறது. இந்நூல் அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தால் அமைந்த பத்துப் பாடல்களைக் கொண்டமைகிறது இதன் ஆசிரியராகிய திருப்போரூர் டி.கோபால் நாயகர் அவர்கள் திருவாலவாய்த் திருத்தலத்தில் வீற்றிருக்கிற சோமசுந்தரக்கடவுள் சிவந்த திருமேனியில் திருநீற்றைப் பூசி, தும்பை மலர்சூடிய செஞ்சடையில் பிறையுடன் கங்கையினைத் தரித்தவன். அனலோடு மழுவினைத் தன் கரத்திலேந்தி யானையுரி போர்த்து வெள்ளியம்பலத்தில் திருநடனம் புரிபவன். சனகாதி முனிவருக்கு ஞானோபதேசம் செய்தவன். ஆதி அந்தமற்றவனாக விளங்கி உயிர்களின் பிறப்பினையறுக்கும் ஞான வடிவாகியவன் என எடுத்துரைக் கின்றார். சோமசுந்தரக்கடவுள் மேருமலையை வில்லாகக் கொண்டு முப்புரத்தை அழித்தவன், ஐந்துதலையைக் கொண்ட பிரமனின் ஒரு தலையினைக் கிள்ளியெடுத்து அவனை நான்முகனாக்கியவன், முருகவேளைத் தன்னுடைய நெற்றிக்

கண்ணிலிருந்து தெறித்த சுடர்களின் மூலம் தோன்றச் செய்தவன், கல்லானைக்குக் கரும்பு கொடுத்தவன், மதுரை வீதிகளில் வளையல் விற்றவன். அத்தகைய, பராக்கிரம் கொண்ட சோமசுந்தரக்கடவுளைக் கண்டு வணங்கித் தன்னுடைய பழவினைகளைப் போக்கிக் கொள்வேன் என இந்நூலார் பாடியுள்ளார். இதனை,

"செய்யானைத் தென்கூடல் செழித்தபூதி, மெய்யானைத்

தனி முதலா மெய்யானைப் பணிந்துபழ வினைவெல் வேனே"

(மது.சோ.அடி.விரு.பா-4)

எனும் பாடலடியானது எடுத்தியம்புகிறது. இந்நூலில் அமைந்த விருத்தப்பாக்களில் அடிமடக்கு ஆசிரிய விருத்த இலக்கணத்திற்கேற்ப ஒரே சீர்கள் மீண்டும்மீண்டும் வந்து வேறுவேறு பொருளைத் தந்துள்ளன. சொற்சுவையோடு பொருட்சுவை நிறைந்ததாகிய இவ்விலக்கியம் உலகத்தாரால் பெரிதும் அறியப்படாததாகவுள்ளது.

மீனாட்சி விருத்தம்

மதுரை மீனாட்சி அம்மையைத் துதிக்கின்ற இவ்விலக்கியம் பன்னிரண்டு சந்த விருத்தங்களால் ஆன அரிய நூலாகும். இந்நூல் கி.பி 17ஆம் நூற்றாண்டைச் சார்ந்த விசயரங்க சொக்கநாத நாயக்கர் காலத்தில் இயற்றப்பட்டதென்பதை,

"விந்தைசெறி கச்சிநக ராதிபதி மன்னவர்

விரும்புகர்த் தாக்களான

விசயரங்கச் சொக்க நாததுரை செங்கோன்மை

மேதினியி லிசை தழைக்க"

(மீனா.விரு.பா-3, அ-(12))

என்ற பாடலடியால் உணரமுடிகிறது. இப்பாடலடியில் விசயரங்க சொக்கநாத நாயக்கரின் செங்கோன்மை தழைத்து உலகமெலாம் புகழ்பரப்ப வேண்டும் எனப் பாடப்பட்டிருப்பதைக் கொண்டு இந்நூல் அம்மன்னர் அரசியற்றுங்காலத்தில் வாழ்ந்த புலவர் ஒருவரால் இயற்றப்பட்டதென்பது விளங்குகிறது. இவ்விருத்த இலக்கியத்தைப் பாடிய புலவர் பெயர் அறியப்படாவிடினும் அவர் ஒரு பெண்பாற்புலவர் என்பதை நூலில் அமைந்த, **"தாயுனைக் கண்டிவ ளேங்கித் துதிக்கின்ற தமிழினுக் கருள்புரிகுவாய்" (மேலது-2(8))** எனும் தொடரைக் கொண்டு அறியமுடிகிறது. அத்தோடு இந்நூலாசிரியர் தெலுங்கு மொழியைத் தன் தாய் மொழியாகக் கொண்டவர் என்பது நூலில் அமைந்த,

"பாண்டியன் தல்லியான பாவையே" (மேலது-4(9))

“சுக்ரவாரம் மகிமைபெறு நின்கொலு அலங்கார முங்கண்டு” (மேலது-2(11))

எனும் தொடர்கள் உணர்த்துகின்றன. இத்தொடரில் உள்ள தல்லி, சுக்ரவாரம் எனும் சொற்கள் தெலுங்கு மொழிச் சொற்களாகும். தல்லி என்பது தாய் என்ற பொருளையும், சுக்ரவாரம் என்பது வெள்ளிக்கிழமை என்ற பொருளையும் தருகின்றது.

இந்நூல் மீனாட்சிதேவியைக் கேசாதி பாதமாக வருணிக்கிறது. கேசாதி பாதம் என்பது இறைவியின் தலை முதற்கொண்டு திருவடி வரையிலும் உள்ள உறுப்புகளை உயர்வுபடுத்திப் பாடுவதாகும். இந்நூலார் மீனாட்சியம்மையின் சிரசில் அணிந்திருக்கின்ற மலர்கள், அணிகலன்களில் தொடங்கிப் பாதம் வரையிலான அழகினைப் புகழ்ந்துரைத்து, உயிர்களுக்கு ஞானத்தோடுச் செல்வத்தையும் வழங்குகின்ற மீனாட்சிதேவி பொன்மலையை வில்லாக எடுத்தச் சோமசுந்தரமூர்த்தியுடன் தென்மதுரையின் வீற்றிருக்கிறாள் என எடுத்துரைக்கிறார் (மேலது-3(8)). இந்நூலில் மீனாட்சியம்மை தடாதகைப் பிராட்டியாகத் தோன்றி உலகாண்டது, இறைவன் விறகு விற்றது, பிட்டுக்கு மண்சுமந்தது, நக்கீரனுக்கு அருளியது போன்ற திருவிளையாடல்களும், மார்கண்டே யனை இயமனிடமிருந்து சிவபெருமான் காத்தருளிய தொன்மம், அம்பிகைக்குரிய விரதங்கள், ஆலயச்சிறப்பு முதலியனவும் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. மீனாட்சியம்மையின் சிறப்பினைப் பாடுகின்ற இந்நூல் டாக்டர்.உ.வே.சாமிநாதையர் நூல் நிலையத் தாரால் 2004 ஆம் ஆண்டு பதிப்பித்து வெளியிடப்பட்டுள்ளது.

திருவாலவாய்த் திருத்தலத்தில் வீற்றிருக்கின்ற மீனாட்சியம்மை சோமசுந்தரக் கடவுள் மீது பாடப்பட்ட பிற விருத்த இலக்கியங்கள் வருமாறு,

1. திருவிளையாடல் சுதந்திரமாலைச் சந்தவிருத்தம் (மழவை சுப்பிரமணிய பாரதியார்)

2. மதுரை மீனாட்சி சுந்தரேசர் ஆசிரிய விருத்தம் (சுப்பிரமணிய ஐயர்)

இந்நூல்கள் பெயரளவில் மட்டுமே அறியப்படினும் அதன் ஆசிரியர்கள் பற்றிய குறிப்புகள் கிடைக்கப்பெறுகின்றன. மழவை சுப்பிரமணிய பாரதியார் அவர்கள் கி.பி பதினெட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். இவர் கூடல் திருவிளையாடல், இலக்குமி புர தலபுராணம், திருமெய்யம் ஈசுவரன் கோயில் தலபுராணக் கீர்த்தனை, திருவிளையாடற் கீர்த்தனை, யமகவந்தாதி போன்ற நூல்களையும் இயற்றியுள்ளார் என்பது பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம் எனும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. மதுரை மீனாட்சிசுந்தரேசர் ஆசிரிய விருத்தம் எனும் நூலைப் பாடிய சுப்பிரமணிய ஐயர் கி.பி இருபதாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். இவருக்குக் கவீசுவரர் என்ற சிறப்புப்பெயரும் வழங்கப்படுகிறது. இவர் மீனாட்சியம்மை ஊசல்,

திருவருட்கோவை போன்ற நூல்களையும் பாடியுள்ளார் எனச் சிற்றிலக்கியப் புலவர் அகராதி எனும் நூலில் ந.வீ.செயராமன் அவர்கள் குறிப்பிட்டுள்ளார் (சிற்றிலக்கியப்புலவர் அகராதி. பக்.எ-117).

நிறைவுரை

கேட்க முத்தியருளும் தலமாகத் திருவாலவாய்த் திருத்தலம் விளங்குகிறது. அத்தலம் சங்க காலந்தொட்டே சிறப்பித்துக் கூறப்பெறும் இலக்கிய வளம் பொருந்தியதாகும். தமிழ்ச்சான்றோர் தம் மனவுணர்வில் தோன்றிய எண்ணங்கள் மற்றும் வாழ்வியல் அனுபவங்களை நூலாகப் படைக்கும் தன்மை கொண்டிருந்தனர். பழந்தமிழ், இலக்கணச் செறிவுடைய மொழியாதலின், அவ்விலக்கண முறைக்கேற்ப புலவர்கள் தெளிவான கட்டமைப்போடு புதிய இலக்கிய வடிவங்களை உருவாக்கினர். பிரபந்த நூல்கள் இலக்கணச்செறிவோடு புலவர்கள் கூறக்கருதிய கருத்தை எளிதில் விளக்கத் துணை செய்ததால், அவ்வகையில் பல நூல்களை இயற்றினர். அளவொத்த நான்கடியால் பாடப்பெறும் விருத்தமும் பிரபந்த வகையைச் சார்ந்ததாகும். அவ்விருத்த வகையில் திருவாலவாய்த் திருத்தலத்தின் மீது பாடப்பட்ட இலக்கியங்கள் சோமசுந்தரரும் மீனாட்சியம்மையும் உயிர்களின்மீது கருணைத்திறம் புரிந்து இம்மை மறுமைப் பேறுகளை அருளவேண்டும், தம் இம்மை வாழ்வில் அடைவதற்குரிய செல்வங்களை வழங்க வேண்டும் எனக் கேட்பதாகப் பாடப்பெற்றுள்ளது. அந்நூல்களில் இறைவன் உயிர்களிடத்துக் கருணைகொண்டு நிகழ்த்திய திருவிளையாடல்கள், தோற்ற வருணனை, சமய மற்றும் வாழ்வியல் அறங்கள், சமயநெறிகள் முதலியவற்றை எடுத்துரைக்கின்றன. அவற்றோடு சேர்த்துப் புதிய இலக்கிய வடிவங்கள் தோன்றுவதற்கான நிலையில் பொருள் வேறுபட்டோ, வேறுபடாமலோ செய்யுளின் அடியோ, சீரோ மீண்டும் வருதலாகிய அடிமடக்கு வகையிலும் விருத்த நூல்களைப் புலவர்கள் இயற்றியுள்ளனர். இறைவனின் பரங்கருணையைப் பாடுவதோடு புலவர்கள் புதிய இலக்கிய உத்திகளையும் அமைத்துப் பாடியிருப்பது மொழியின் வளர்ச்சிக்குப் பெரிதும் துணைநிற்கும் என்பது இவ்வாய்வின் முடிவாகும்.

பார்வை நூல்கள்

References

கோபால் நாயகர், டி. மதுரை சோமசுந்தரக்கடவுள் அடிமடக்கு ஆசிரிய விருத்தம். கோள்டன் அச்சியந்திரசாலை, 1914.

மேலவர். மதுரை மீனாட்சியம்மன் அடிமடக்கு ஆசிரிய விருத்தம். கோள்டன் அச்சியந்திரசாலை, 1914.

மேலவர். மதுரை மீனாட்சியம்மன் அறுசீரடியாசிரிய விருத்தம். கோள்டன் அச்சியந்திரசாலை, 1914.

கோவிந்தராச முதலியார், கா. ர., பதிப்பாசிரியர். பன்னிரு பாட்டியல். சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1969.

சாமிநாதையர், உ. வே. திருவிளையாடல் கருணைத் திருவிருத்தம். உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம், 1959.

செயராமன், ந. வீ. சிற்றிலக்கியப் புலவர் அகராதி. பாரி நிலையம், 1983.

நல்லசிவன் பிள்ளை, சு. மதுரைத் திருவிளையாடல் போற்றித் திருவிருத்தம். ஜெய்ஹிந்த் அச்சகம், 1940.

பசுபதி, ம. வே. மீனாட்சி விருத்தம். உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம், 2004.